DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.20**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : ஜாகீர் உசேன்

Father Name : காதர் மைதீன்

VILLAGE :

CALLING :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது அல் அமீன் நகரில் குடியிருக்கிறேன். நான் JAF Mobiles என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை 10 வருடங்களுக்கு முன்பு விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் என்னுடைய மொபைல் கடையை அடைத்துவிட்டு சென்றுவிட்டேன் என்றும், மறுநாள் கடைக்கு வந்த போது, அங்கு நடந்த சம்பவத்தை குரு சலூன் உரிமையாளர் அர்ஜுனன் என்பவர் சொல்லி

விவரத்தை தெரிந்துகொண்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.